செய்தி குறிப்பு எண்: 018/042023 நாள்: 17/04/2023

# <u>செய்திக் குறிப்பு</u>

## *RTE சட்டம், 2009 தனியார் பள்ளிகளில் 2023 -2024 கல்வி ஆண்டில் மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது*

*குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, சட்டப்பிரிவு 12(1)(சி)இன்படி 2023 – 24ஆம் கல்வியாண்டிற்கு 25 % இட ஒதுக்கீட்டின் கீழ் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் நுழைவுநிலை வகுப்பில் அதாவது எல்.கே. ஜி.முதல் நடைபெற்று வரும் பள்ளிகளில் எல்.கே.ஜி வகுப்பிலும், 1ஆம் வகுப்பு முதல் நடைபெற்று வரும் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பிலும் சேர்க்கைக்கு **20.04.2023** முதல் **18.05.2023** வரை **rte.tnschools.gov.in** என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம். **18.05.2023** வரை பெறப்படும் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து தகுதியான விண்ணப்பங்கள் சார்ந்த விவரங்களும், விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருப்பின் அதற்கான காரணங்கள் இணையதளத்திலும், சம்மந்தப்பட்ட பள்ளித் தகவல் பலகையிலும் **21.05.2023** அன்று மாலை 5.00 மணிக்கு வெளியிடப்படும்.*

*மேற்காண் திட்டத்தின் கீழ் எல்.கே.ஜி வகுப்பிற்கு விண்ணப்பிக்கும் குழந்தைகள் 01.08.2019 முதல் 31.07.2020 க்குள்ளாகவும், ஒன்றாம் வகுப்பிற்கு விண்ணப்பிக்கும் குழந்தைகள் 01.08.2017 முதல் 31.07.2018க்குள்ளாகவும் பிறந்திருக்க வேண்டும்.*

*பெற்றோர்கள் / விண்ணப்பதாரர்கள் கீழ்க்கண்ட சான்றிதழ்களை உரிய அலுவலரிடம் பெற்று பதிவேற்றம் செய்ய வேண்டும்.*

1. *பிறப்புச் சான்றிதழ்.*
2. *வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினர் கீழ் விண்ணப்பிக்க சாதிச் சான்றிதழ்.*
3. *வாய்ப்பு மறுக்கப்பட்ட சிறப்பு பிரிவினர் கீழ் விண்ணப்பிக்க உரிய சான்றிதழ்.*
4. *நலிவடைந்த பிரிவின் கீழ் விண்ணப்பிக்க பெற்றோரின் ஆண்டு வருமானம் 2 இலட்சத்திற்கும் கீழ் உள்ள வருமானச் சான்றிதழ்.*
5. *இருப்பிடச் சான்று.*

*பெற்றோர்கள் / விண்ணப்பத்தாரர்கள் இணைய வழியாக எங்கிருந்து வேண்டுமானாலும் விண்ணப்பிக்கலாம். மேலும், முதன்மைக் கல்வி அலுவலர்/ மாவட்டக் கல்வி அலுவலர்/ வட்டாரக் கல்வி அலுவலர்/ ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி வட்டார வள மைய அலுவலங்களில் கட்டணமின்றி விண்ணப்பிக்கத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.*

*நிர்ணயிக்கப்பட்ட இடங்களைவிடக் கூடுதலாக விண்ணப்பங்கள் பெறப்பட்டிருப்பின் சம்மந்தப்பட்ட பள்ளியில் **23.05.2023** அன்று குலுக்கல் நடத்தப்பட்டு சேர்க்கைக்கான குழந்தைகள் தெரிவு செய்யப்படுவர். சேர்க்கைக்குத் தெரிவு செய்யப்பட்ட குழந்தைகளின் பெயர் பட்டியல் விண்ணப்ப எண்ணுடன் **24.05.2023** அன்று இணைய தளத்திலும் மற்றும்*

*சம்மந்தப்பட்ட பள்ளியின் தகவல் பலகையிலும் வெளியிடப்படும். சேர்க்கைக்குத் தெரிவு செய்யப்பட்ட குழந்தைகளை **29.05.2023** க்குள் சம்மந்தப்பட்ட பள்ளியில் சேர்க்க வேண்டும்.*

*இது சார்ந்து பெற்றோர்கள் / விண்ணப்பத்தாரர்கள் ஏதேனும் தகவல்களைக் கேட்க விரும்பினால் சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் முதன்மைக் கல்வி அலுவலகம் / மாவட்டக் கல்வி அலுவலகம் ( தனியார் பள்ளிகள்) அணுகவேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது.*

*தனியார் பள்ளிகள் இயக்குநர்*